# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 31/2012 | Date : 15.06.2022. | DW2 |
|---|---|---|
| Name: மே.வை.சண்முகராஜா | S/o. வையாபுரி | |
| Evidence Recorded Time: 04.10 P.M. to 04.25 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். கட்சி பொறுப்பில் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கட்சியின் மாவட்ட செயலாளர், முன்னாள் வட்ட செயலாளர், கட்சியின் தலுக்கா குழு உறுப்பினர், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு அந்த காலகட்டத்தில் அந்த பொறுப்பில் இருந்தவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டவர் தங்கவேலு என்று தெரிந்து கொண்டேன். வழக்குரை, பதிலுரை ஆகியவற்றை படித்துப்பார்த்து தெரிந்துகொண்டேன். நான் தாக்கல் செய்யத நிரூபண பிரமான பத்திரத்தை நான்தான் தயார் செய்தேன். இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்று தெரியும். கட்சியின் அலுவலகம் தனக்கு சொந்தமான என்று வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்று தெரியும். வேறு பரிகாரம் என்ன கோரியுள்ளார் என்று தெரியாது. எனக்கும் ராஜகோபாலுக்கும் தனிப்பட்ட முறையில் மனவருத்தமே இதுவரையில் எதுவும் கிடையாது. 1995-ம் ஆண்டு கட்சி அலுவலகத்தை உரிமை கேரிய காலத்திலிருந்து மனவருத்தம் ஏற்பட்டது. ராஜ கோபால் கட்சியில் என்ன பதவியில் இருக்கும் போது நான்கட்சிக்கு வந்தேன் என்றால் வாதி மேட்டூர் தாலுக்கா செயலாளராக இருக்கும் போது நான் கட்சி உறுப்பினராக வந்தேன். அது 1984-ம் ஆண்டு ஆகும். 1984-ம் ஆண்டு எனக்கு 20 வயதாகும். அப்போது நான் பி.காம் படித்து முடித்திருந்தேன். மதுரை காமராஜர் பல்கலைகழக்ததில் தொலைதுாரக்கல்வியில் பயின்றிருந்தேன். எனக்கு அப்போது திருமணம் நடைபெறவில்லை. 1995-ம் ஆண்டுதான் எனக்கு திருமணம் நடைபெற்றது. 1984-ம் ஆண்டு நான் கட்சிக்கு வந்தேன், அதற்கு முன்பு கட்சியில் நடந்த விசயங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ராஜகோபாலன் மால்கோவில் வேலையில் இருந்தார் என்றும் அதன் பின்னிட்டு முழுநேரமாக கட்சிக்கு வந்தார் என்றும் நான் கூறுயிருக்கிறேன். அவ்வாறு வாதி எந்த ஆண்டு மால்கோவில் வேலையில் இருந்தார் என்றும் அவர் எந்த ஆண்டு வேலையில் இருந்து நின்றார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. அவர் திருநெல்வேலி பக்கம் உள்ள துாத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியை சார்ந்தவர் ஆவார். அவர் என்ன படித்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர் கட்சிக்கு எந்த ஆண்டு வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரிய 1975-ம் ஆண்டு முதல் கட்சி பணியாற்றி வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியில் வாதி இருந்ததால்தான்

வாதி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும். அதற்கு பின்னிட்டு அவர் கட்சிக்கு தன்னை முழுமையாக அர்பணித்து பணியாற்றிய விவரம் எனக்கு தெரியும். வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண்.216/12 ஆகும். அதன் பட்டா எண்.684, வீரக்கல் புதூர் பேரூராட்சி ஆகும். அதன் அளவு 1200 சதுரடி ஆகும். நீளம் 33 x 22 என்ற அளவிலான இரண்டு மனை நிலங்களாகும். அந்த நிலத்திற்கு முதன் முதலில் கொடுக்கப்பட்ட பட்டாவை நான் பார்த்தது இல்லை. அந்த பட்டா எந்த அதிகாரியால் வழங்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. பட்டா வழங்கப்பட்ட காலத்தில் நான் கட்சிக்கு வரவில்லை என்றால் நான் கட்சியில் உறுப்பினராக இருந்தேன். பட்டா எந்த பசலி வருடம் வழங்கப்பட்டது என்று தெரியாது ஆனால் 1988-ல் வழங்கப்பட்டது. அந்த இடத்தில் பட்டா வழங்கப்பட்ட போது மொத்தம் 26 பேருக்கு பட்டா வழங்கப்பட்டது. அந்த பட்டாக்கள் யார் யாருக்கு வழங்கப்பட்டது என்றும் என்ன அளவுகள் கொண்ட மனை நிலங்களுக்கு வழங்கப்பட்டது என்பதும் எனக்கு தெரியாது. இந்த பட்டா நிபந்தனைக்குட்பட்ட பட்டாவா அல்லது நத்தம் பட்டாவா அல்லது யுடிஆர் பட்டா என்று எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.